பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 2, Issue 1, November 2021** **E-ISSN: 2583-0880**

# Ayyavazhi Tamil Social Religious Thoughts

**Dr S. Santhi,** Guest Faculty, Department of History, Alagappa University, Karaikudi-3, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0001-6965-2478**
**DOI: 10.5281/zenodo.6433370**

## Abstract

*It is noteworthy that Vaikunda Swami, a social reformer who emerged in Tamil Nadu, developed a new set of religious doctrines and thereby carried out many social reforms for the religious thought of the people in the community. It would not be an exaggeration to say that his reforms have been well received by the Nadar community but by other eighteen castes that bore parochial atrocities in southern Tamil Nadu. It is exemplanary to say that he fought against the racism of the upper castes against the people and the king. He also spoke out for women's rights. Today, however, his movement has lost its essence of social reform and retains only the appearance of being a subdivision of Hinduism. He taught love and compassion among the people. He was the one who exposed the antiquity of the society to the people and motivated them for destroying the caste and religion differences. It is noteworthy, that this article is based on the religious thoughts of Ayyavazhi in Tamil society in the 19th century AD and his biography.*

**Keywords:** Ayya Vaikundar, Ayyavazhi, Samathuva sangam, Nilal Thankal Talaippakai, Muttirik kinaru, Tuvaiyal Panti, Anpuk koti.

## References

[1] Akilathirattu ammanai Arappadanool (First grade), Vaikundar Seva Sangam (Organisation), Attoor.
[2] Akilattirattu Ammanai (1989), (published by T. Palaramachandran Nadar), 9th impression.
[3] Amalan, N (2000), Ayya Vaikundar Punitha Varalaru, Akilam Publications, Swamithoppu
[4] Arisundara Mani, A (2002), Akilathirattu Ammanai Parayana Urai, Ayya Vaikundar Thirukkudumbam Publications, Nagercoil.
[5] Chellam, V.T (2002), Thamizaka Varalarum Panpadum (The History and Culture of Tamil Nadu), Manickavasakar Publications, Chennai.
[6] Dharmarasan, T (1996), Akilathirattu, Pon Publications, Chennai.
[7] Elango, N and Vijaya Shanthi Elango (1997), Ayya Vaikuntar – The Light of the World, (Published by the authors).

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

[8] Ilanchezhiyan, M (1999), Pandiyarkula Nadrakal Kulamurai Kilathal, Chezhiyar Publications, Virudhunagar.

[9] Immanuel, M (2007), Kanniyakumari: Aspects and Architects, Historical Research & Publications Trust, Nagercoil, ISBN 978-81-901506-2-0

[10] Krishnanathan, T (2000), Ayya Vaikundarin Vazhvum Sinthanaiyum, Madurai Kamaraj University, Thinai Publications, Nagercoil.

[11] Pandiyan, MSS (1992) Meanings of 'colonialism' and 'nationalism': an essay on Vaikunda Swamy cult, Sage Publications

[14] Patrick, G (2003), Religion and Subaltern Agency, Department of Christian Studies, University of Madras, Chennai.

[15] Paulose, C (2002), Advaita Philosophy of Brahmasri Chattampi Swamikal, Sree Sankaracharya University of Sanskrit, Ayya Vaikunta Nather Sidhasramam, Pothaiyadi.

[16] Ponnu, R (2000), Sri Vaikunda Swamigal and Struggle for Social Equality in South India, Madurai Kamaraj University, Ram Publishers, Madurai.

[17] Ponnu, R (2002), Vaikunda Swamikal Ore Avataram, Ram Publishers, Madurai.

[18] Manibharathi, A (2003), Akilathirattu Vilakka urai, Thirunamappukazh Publications, Chennai.

[19] Madanjeet Singh (2005), The Sasia Story, France, ISBN 92-3-103992-X.

[20] Nagam Aiya, V (1989), The Travancore State Manual, Volume-2, Asian Educational Services, ISBN 81-85499-33-0.

[21] Ramasupramaniyam, V.T (2001), Thirumagal Thamizhagarathi, Thirumagal Nilayam, Chennai.

[22] Ramasamy, SM (2006), Geomatics in Tsunami, Centre for Remote Sensing, Bharathidasan University, India – Department of Science and Technology, New India Publishing, ISBN 81- 89422-31-6

[23] Samuel Mateer (1871), The Land of charity: a descriptive account of Travancore and its people, Asian Educational Services, ISBN 81-206-0319-2

[24] Sarvesvaran, P, Sri Vaikunda Swamikal – A Forgotten Social Reformer.

[25] Samuel Zecharia (1897), The London Missionary Society in South Travancore 1805–1855, LMS Press, Nagercoil.

[26] Santhi, S. "Swami Vivekananda's Perspective on Education." JETIR 6, no. 5 (2019): 598- 602.

[27] Shunmugam, R (2001), Nadar Kulathil Narayanar Avataram, Nadar Kuladeepam Publications, Karankadu.

[28] Sreedhara Menon.A (1967), A Survey of Kerala History, D.C. Books, Kottayam, ISBN 81-264-1578-9

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

[29] Sundaram Swamigal, P and Ponnumani,K (2000), Ucchippadippu, Ayyavaikunta Nather Sidhasramam, Pothaiyadi.

[30] Sundaram Swamigal.P and Ponnumani.K (2001), Ayyavaikundanathar Jeevacharithram (Biography of Ayya Vaikunta Nathar), Ayyavaikuntanathar Siddasramam Publications, Pothaiyadi.

[31] Thechanathu Thuvaraga pathi, Akilathirattu Akakkorvai, Published by Thechanathu Thuvaraga pathi.

[32] Vivekanandan, N (2003), Akilathirattu Ammanai Moolamum Uraiyum (Part 1&2), Vivekananda Publications, Nagercoil.

[33] Vivekanandan.N (2001), Arul Nool Moolamum Uraiyum, Vivekananda Publications, Nagercoil.

[34] Vaikundar Seva Sangam (2002), (An organisation) Ayya Vaikundar 170th Avathar-Special Edition, Attoor.

[35] Vivekanandan.N (1988), Akilathirattu Ammanaiyil Vaikunda Suvami Sampooranathevana? Vivekananda Pathippakam, Nagercoil.

[36] Ward, CF and Conner (1860), Geographical and Statistical Memoir of the Survey of Travancore and Cochin States, Travancore Sircar Press, Trivandrum.

**Author Contribution Statement:** NIL

**Author Acknowledgement:** Nil

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

# அய்யாவழி தமிழ் சமூகச் சமயச் சிந்தனைகள்

**முனைவர் செ. சாந்தி,** கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120

**DOI: 10.5281/zenodo.6433370**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழகத்தில் தோன்றிய சமூக சீர்திருத்தவாதியான அய்யா வைகுண்டர் ஒரு புதிய சமயக் கோட்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தில் மக்களிடம் மதச் சிந்தனைகளுக்காகப் பல சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தென் தமிழகத்தில் நாடார் சமூகத்தினரிடையே இவரது சீர்திருத்தங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. உயர்ந்த சாதி என்னும் இனவெறியை எதிர்த்து மக்களிடமும் மன்னரிடமும் எதிர்த்து போராடியவர். பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். மக்களிடையே அன்பையும் கருணையையும் போதித்தவர். சமுதாயத்தின் பழைமையை மக்களிடம் எடுத்துரைத்து சாதி சமய வேறுபாட்டை தகர்த்தெரிவதற்குக் குறள் கொடுத்தவர். ஆனால், இன்றைக்கு அவரது இயக்கம் சமூகச் சீர்திருத்தம் என்கிற அதன் சாரத்தை இழந்து இந்து சமயத்தின் ஓர் உட்பிரிவு என்கிற தோற்றத்தை மட்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் கிபி 19ம் நூற்றாண்டில் அய்யாவழி தமிழ்ச் சமுதாய மதச் சிந்தனைகளைப் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரையானது அமையப்பெறுகின்றது.*

**கருச்சொற்கள்:** அய்யா வைகுண்டர், அய்யாவழி, சமத்துவ சங்கம், நிழல் தாங்கல், தலைப்பாகை, முத்திரிக்கிணறு, துவையல் பந்தி, அன்புக் கொடி.

.

## முன்னுரை

பண்டைய காலத்திலிருந்து மனிதன் தன்னுடைய வாழ்க்கைப் பற்றியும், தான் புரிந்த சாதனைகளைப் பற்றியும் எழுத முற்பட்ட நாளிலிருந்து வரலாறானது துவக்கம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதனைப் பற்றியறிய பயனுள்ள சான்றுகள் மிகுதியாக இல்லையென்றேக் கூறலாம். மக்களின் மரபுகள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தமுறை, மொழிவாரியாக வாழ்ந்த முறை, மக்கட் தொகுதிகளுக்குள் நிலவிய உறவுமுறை, அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகள் மனித எலும்புகள் ஆகியவற்றைக்

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

கொண்டு தமிழக மக்களின் வரலாற்றுக்கு முந்திய காலச் செய்திகளை ஓரளவு அறியலாம். இச்செய்திகள் இதேகால நிலைக்குரிய வேறு சில நிலப்பகுதிகளின் செய்திகளோடு ஒத்திருப்பதையும் காணலாம். தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு முந்திய காலத்தை அறிஞர்கள் நான்கு காலங்களாகப் பிரித்துள்ளனர். அவை: பழங்கற்காலம், புதியகற்காலம், தாமிர-கற்காலம், ஆதி உலோகக்காலம் என்பனவாம். இவற்றுள் உட்பிரிவுகளும் உண்டு. தமிழக நாகரிகத்தில் ஒவ்வொரு காலங்களுக்கிடையே தொடர்ந்து நாகரிகம் வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றன என்னும் இக்கருத்தினை இராமச்சந்திரதீட்சிதர் ஏற்றுக் கொண்டதோடு, தென்னிந்திய கற்கால நாகரிகத்தை உருவாக்கியவர்களும் தமிழ் மக்களே என்கிறார். இவ்வகையில் சிறப்பாக வளர்ந்து வந்த நாகரிகத்தின் வளர்ச்சியானது சமுதாயம் என்ற உட்பிரிவானது மக்களுக்குள்ளே அதிகமான சாதியக் கொள்கைகள் உருவாக்கப்பெற்று உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகள் உருவாகியதோடு தனித்தனி சாதிப் பிரிவுகளாக பிரிந்துள்ளனர்.

பொதுவாக தொழிலின் அடிப்படையிலே சாதிகள் தோன்றியள்ளன. சாதி என்னும் பெயர்த் தோற்றத்திற்கு அறிஞர்கள் பல்வெறு விளக்கங்களைத் தந்துள்ளனர். சாதிப் பிரிவின் வழியாக ஆய்வு செய்த அறிஞர்களில் ஒருவரான எஸ்.வி.எட்கர் என்பவர் சாதி என்பது வம்சம் அல்லது இனம் என்பதைக் குறிக்கப் பயன்படுகிறது. இச்சொல் இந்தியாவில் போர்த்துக்கீசியர்களால் பதினைந்தாம் நூற்றாண்டில் கையாளப்பட்டு, தற்பொது கேஸ்ட் என்னும் பிரெஞ்சு சொல்லுக்கு நிகராக வழங்கப்பட்டு வருகிறது எனக் குறிப்பிடுகிறார். ஒரே மாதிரியான தொழில் உணவுப் பழக்கங்கள். திருமணம் ஆகியவற்றை பின்பற்றியோரை இணைத்து ஒரு சாதியாகப் பிரித்திருக்கலாம். இதனை தி.வே. குப்பசாமி புனிதமான சில நியமங்களைக் கடைப்பிடிப்பதற்காக அதிலும் குறிப்பாக உணவு திருமணம் ஆகியவைகளில் விசித்திரமான சில விதிமுறைகளைக் கையாண்டு குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்த கூட்டத்திற்குச் சாதி என்று பெயர் எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு மக்களிடையே உருவான சாதியக் கொள்கைகளுக்கு எதிராகப் பலர் குறள் கொடுத்துள்ளனர். கிபி 1809 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் முத்துக்குட்டி என்னும் இயற்பெயருடைய வைகுண்ட சுவாமிகள் சாதி வன்முறைக் கொடுமைக்கு எதிராகவும் மற்றும் தீண்டாமைக்கு எதிராகவும் பல போராட்டங்களை தொடர்ந்து அதற்கான சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார் என்பதைக் கீழ்கண்டவாறு விளக்கப்பெறுகின்றன.

தமிழகத்தில் கிபி 19ம் நுற்றாண்டு முதல் அய்யா வைகுண்டரின் புகழ் தென் திருவிதாங்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மிகவேகமாகப் பரவியது. (Chellam,V.T 2002) அவர் சமுதாயப் பார்வையில் ஒரு அற்புத சக்தி படைத்த மனிதராக அறியப்பட்டார். மறுபுறம் சமய நம்பிக்கையின் அடித்தளத்தில் பண்டாரமாகவும்

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

அறிவிக்கப்பட்டார். அகிலத்திரட்டு அம்மானை அவரை நாராயண பண்டாரம் என விளம்புகிறது. நாட்டுமக்கள் இவரது போதனைகளைக் கவனிக்க இவர் முன்னிலையில் கூடினார்கள். மேலும், நாராயண பண்டாரம் அவர்களது நோய்களைத் தீர்த்ததாகவும் அகிலம் கூறுகிறது. அவரை மக்கள் வழிபடத்தொடங்கினர். வைகுண்டர் அவர்களை சாதி வேறுபாடின்றி ஒரே கிணற்றில் குளிக்க போதித்தார். மக்களை, அனைத்துப் பேதங்களையும் கடந்து சமபந்தி உண்ணவும் போதித்தார். இந்தியாவின் முதல் சமபந்தி அய்யாவழி சமயக் கூடல்களில் தான் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. அய்யா மக்களுக்குப் பல போதனைகளை வழங்கினார். அவற்றில் முக்கியமானதாக, அவர் நடக்கும் கலியுகத்தை அழித்துப் பேரின்ப நிலையான தர்மயுகத்தை மலரச்செய்து சான்றோருக்கு நித்திய வாழ்வை அளிக்கப் போவதாகக் கூறினார். மறுமை தர்மமான அந்நிலையை அடைய *தாழக் கிடப்பாரை தற்காப்பதே தர்மம்* என்னும் கோட்பாட்டை ஆதாரமாக வைத்துச் செயல்பட மக்கள் அவரால் அறிவுறுத்தப்பட்டனர். மேலும், அவரின் அவதார செயல்பாடுகள், சமுதாயப் பார்வையில் இக்கோட்பாட்டையே மையமாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. சான்றோராகிய மக்கள் தர்மயுக வெளிப்படலுக்கு முக்கியப் பங்கு ஆற்ற வேண்டியவர்களாக அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் தங்களைத் தர்மயுக மக்களாக மாற்ற சில முறைகளைக் கடைபிடிக்க அய்யா வலியுறுத்தினார். இவ்வாய்மொழிகளில், மக்கள் தங்களைச் சுயமரியாதை உடையவர்களாகவும், அச்சமற்றவர்களாகவும் தங்களை மாற்றிக் கொண்டதை வைகுண்டரின் சீர்திருத்தப் போதனைகளின் மூலம் அறியமுடிகின்றது.

**அய்யா வைகுண்டர் வாழ்க்கை வரலாறு**

கிபி 1809 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் அய்யா வைகுண்டர் பிறந்தார். சாதி முறை மற்றும் தீண்டாமைக்கு எதிராக அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். (Nagam Aiya,V,1989) சமய சடங்குகளை எதிர்த்தார். இவரது போதனைகளை மேற்கொண்ட மக்கள் காலப்போக்கில் அய்யாவழி போதனைகள் பெயர் மாற்றம் அடையச்செய்தனர். கிபி 19ஆம் நூற்றாண்டின் மத்தியவாக்கில் அய்யாவழி ஒரு தனிப்பட்ட சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தென்திருவாங்கூர் மற்றும் தெற்கு திருநெல்வேலி பகுதிகளில் அய்யாவழி வேகமாகப் வளர்ச்சியயைத் தொடங்கியது. தனது மக்கள் சேவையின் காரணமாய் அய்யா என்று அன்போடு அழைக்கப்பட்ட சுவாமிகளின் சமாதி சாமித் தோப்பில் உள்ளது. (Immanuel,M (2007) அங்கே ஏற்றி வைக்கப்பட்டுள்ள குத்துவிளக்கு ஒளியை மக்கள் வணங்கி வருகின்றனர். இவர் இயற்றிய நூல்களில் அகிலத்திரட்டு அம்மானை (Akilattirattu Ammanai,1989) மற்றும் அருள் நூல் அய்யாவழியின் புனித நூல்கள் ஆகும். இவற்றுள் அகிலத்திரட்டு அம்மானை முதன்மைப் புனித நூலாகவும், அருள் நூல் இரண்டாம் நிலை புனித நூலாகவும் கருதப்படுகிறது.

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

**சமத்துவ சங்கம் தோற்றுவித்தல்**

சமத்துவ சங்கம் தோன்றுவதற்கான காரணம் பனை மரத்தின் மீது ஏறி கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த நாடார் சமூகத்தினர் சாணார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தீண்டத்தகாதவர் எனும் வகையில் உயர் சாதியினரால் பாதிக்கப்பெற்றனர். தீண்டாமையின் காரணமாக ஒரு நாடார் நம்பூதிரி பார்ப்பனரிடமிருந்து 36 அடி தூரத்திலும், நாயரிடமிருந்து 12 அடி தூரத்திலும் நின்று தான் சந்திக்க வேண்டும் என்று சந்திப்பு தூரங்கள் கூட வரையறுக்கப்பட்டிருந்தன. பொதுச் சாலைகளில் செல்லவோ பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கவோ இச்சமூகத்தினருக்கு உரிமைகள் மறுக்கப்பெற்றிருந்தது. (Shunmugam,R 2001) உயர் சாதியினர் வாழும் தெருக்களில் கூடப் போக முடியாமல், கோவில்களுக்கு அருகேயே பள்ளிகளும், அரசு அலுவலகங்களும் இருந்ததால் அங்கேயும் போக முடியாமல் அதிகாரிகள் வெளியே வரும்போது மட்டும் தான் பார்க்க முடியும் என்ற சூழலுக்குத் தள்ளப்பெற்றிருந்தனர். அது மட்டுமல்லால் நிழற்குடை பிடிக்கவோ, மிதியடி அணியவோ ஓடு வேய்ந்த வீடுகள் கட்டவோ, பொன் நகை அணியவோ அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பெற்றிருந்தது. பெண்களுக்கு தன் இடையில் தண்ணீர் குடம் எடுத்துச் செல்லவதற்கு, தோள்சேலை (மாராப்பு) அணிவதற்கும் உரிமைகள் மறுக்கப்பெற்றிருந்தன.

நாடார்களில் ஒரு சிறு பகுதியினர் நிலவுடைமையாளர்களாக இருந்தனர். பெரும் பகுதியினராயிருந்தவர்கள் கள் இறக்கும் தொழிலை மேற்கொண்டவர்கள். இவர்களை நிலவுடைமையாளர்களாக இருந்த நாடார்கள் மதிப்பதும் கிடையாது; பாதுகாப்பதும் கிடையாது. உயர்சாதியினரோ இவர்கள் அனைவரையுமே தீண்டத்தகாதவர்களாகப் பாவித்தனர். திருவிதாங்கூர் அரசும் இதைக் கண்டு கொள்ளாமல் மக்களின் செயல்பாடுகளை ஆதரித்தே வந்துள்ளது. (Ilanchezhiyan,M 1999) இந்த நிலையில் நாடார் சமூக மக்களின் இன்னல்களை மாற்றியமைக்க களத்தில் இறங்கிய அய்யா வைகுண்டர், இந்த மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திட சமத்துவ சங்கம் என்ற அமைப்பினைத் தோற்றுவித்தார். இதில் ஆயிரக்கணக்கான மக்கள் உறுப்பினர்களாகப் பங்காற்றினர். ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் பங்கேற்றனர். இந்நிலையில் அய்யா வைகுண்டர் பஞ்ச பாண்டவர்கள் என்று ஐந்து பேரைத் தனது சீடர்களாகத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு ஊருக்கும் சென்று தனது சமத்துவக் கொள்கையைப் பரப்புமாறு கேட்டுக் கொண்டார். அவர்களோடு அய்யா வைகுண்டர் பயணம் மேற்கொண்டு நாடார் சமூக மக்களின் துயரங்களைத் தகர்த்தெரியும் வகையில் தமது சமயப் பிரச்சாரங்களை மேற்கொண்டார்.

**நிழல் தாங்கல்**

அய்யா வைகுண்டர் ஒற்றுமை உணர்வினை வளர்த்திடவும், தன்னுடைய போதனைகளைப் பரப்பிடவும் நிழல் தாங்கல் என்பதைப் பல ஊர்களில் அமைத்தார்.

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

(Krishnanathan,T,2000) இது வழிபாட்டுத் தலமாகவும், கல்வி நிலையமாகவும், அய்யா வைகுண்டரின் போதனைகளைப் பரப்பும் பிரச்சார மையமாகவும் விளங்கியது. சமத்துவ சங்கத்தின் கிளைகள் போல செயல்பட்ட இவற்றில் வழிபாடு நடந்தாலும் விக்ரக ஆராதனை கிடையாது. காரணம் விக்ரகம் என்றால் பூஜகர் என்றும் பூஜகர் வந்தால் அங்கு சாதியப் பாகுபாடு புகுந்துவிடும் என்றும் அதனைத் தவிர்த்திருக்கிறார். சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு என்பது இப்படி சமய சீர்திருத்தங்களோடே மாற்றியமைக்கப்பெற்றது. அதே நேரத்தில் மக்களுக்கு சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்கவும், அவர்களுக்கு சுயமரியாதை உணர்வை உணர்த்தவும், சமூக அவமரியாதைகளில் சிலவற்றை ஒழித்து அச்சத்தைப் போக்கி எதிர்த்து நிற்கும் துணிச்சலையும் உருவாக்கினார்.

**தலைப்பாகை**

ஒரு நாடார் சமூக இளைஞனுக்கு அவனது 16ஆவது வயதில் தலையில் தலைப்பாகைக் அணிவித்து கையில் பிச்சுவா கத்தி கொடுப்பார்கள். அதாவது அவர் பெரிய மனிதன் ஆகிவிட்ட தன் அடையாளமாக கவுரவிக்கப்படுகிறார்கள். (Arisundara Mani,A 2002) குடும்பத் தலைவர் இறந்ததும் அவரது மகன்களுக்கு இப்படி தலைப்பாகைக் கட்டுவார்கள். இதற்கு உறுமால் கட்டு என்று பெயர். இந்தப் பழக்கம் இடைக்காலத்தில் நாடார் சமூகத்தைப் பொறுத்தவரை உயர்சாதியினரால் ஒடுக்கப்பெற்றிருந்தது. தலையில் சுமை தூக்கக் கூட தலைப்பாகை அணிய அனுமதிக்கவில்லை. சுருமாடு என்று பெயரில் வைக்கோலை மட்டும் தலையில் வைக்க அனுமதிக்கப்பட்டனர். இந்த கட்டுப்பாட்டை மீறும் வகையில் அய்யா வைகுண்டர் தன்னைக் காண வந்த மக்களிடம் தலைப்பாகை அணிந்து வருமாறு வலிபுறுத்தினார். தற்போது வரை அய்யா வைகுண்டர் வழிபாட்டின் போது தலைப்பாகை அணிவதைக் காணலாம்.

**சமதர்மக் காலனி**

அய்யா வைகுண்டர் சமதர்மக் காலனி எனும் வகையில் வீடு கட்டுவதிலும் சில மாறுதல்களை கொண்டு வந்தார். மாடி வீடு, ஓடு போட்ட வீடு ஆகியவற்றை அன்றைக்கு தாழ்ந்த சாதி மக்கள் கட்டிவிட முடியாது. அவர்களது வீடுகள் ஒழுங்கற்று ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. இதற்குப் பதிலாக பல அறைகளுடைய ஒரே திசையில் முன் கதவு வைத்த வீடுகளை அடுத்தடுத்து கட்டுமாறு கூறினார் சுவாமிகள். இது சமதர்மக் காலனி என்னும் சீர்திருத்தமாக (Ponnu,R,2000) கொண்டு மக்களிடையே நெருக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் வகையில் வீடுகளை அமைத்தார்.

**முத்திரிக் கிணறு**

அய்யா வைகுண்டர், கிணற்றில் நீர் எடுப்பதற்கு கூட உரிமை இல்லாத மக்களுக்காகத் தனது சொந்த ஊரில் கிணறு ஒன்றை தோண்டச் செய்து அனைத்து மக்களும் அதனைப்

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

பயன்படுத்தலாம் என்றும் அதற்கு முத்திரிக்கிணறு (புனிதக் கிணறு) (Amalan,N, 2000) என்றும் பெயரிட்டார். அய்யா வைகுண்ட சுவாமிகளைக் காண வந்த மக்கள் அக்கிணற்று நீரைக் கொண்டு குளித்து, உண்டி சமைத்து உண்டு மகிழ்ந்தனர். அனைத்து சமுதாய மக்களும் இப்படி ஒரே கிணற்றில் நீரெடுத்து சமைத்து சமபந்தி போஜனம் செய்ய வைத்தார் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**துவையல் பந்தி**

அய்யா வைகுண்டர் போதனைகளை மட்டும் மக்களிடம் கொண்டு செல்வதால் எந்த பயனுமில்லை என்று கருதிய ஒரு முகாம் நடத்தி அதற்கு மக்களை அழைத்துப் பயிற்சி கொடுத்து அதற்கு துவையல் பந்தி என்றப் பெயருமிட்டார். அதாவது இந்த முகாமில் மூன்று வேளையும் நன்றாகக் குளித்து, துவைத்து, நண்பகல் ஒரு வேளை பச்சரிசி, பாசிப்பயிறு வேகவைத்து கஞ்சியாக்கி உண்டு ஒரு வகையான தவ வாழ்க்கை மேற்கொள்ளச் செய்தார். (Manibharathi,A 2003) இதனால் சமூக வேறுபாடின்றி ஒரே இடத்தில் மக்கள் தங்குவதற்கும் இவரது போதனைகளை மேற்கொள்வதற்க்கும் சிறந்த ஒரு வாய்ப்பாக அமையப்பெற்றது. அதுமட்டுமல்லாமல் இந்த முகாமில் அய்யா வைகுண்டர் கற்பித்தப் போதனைகளை அதில் பங்கேற்றோர் ஊர்தோறும் சென்று மக்களிடையே பரப்பி வந்தனர் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**அன்புக் கொடி மக்கள்**

அய்யா வைகுண்டர் சங்கம் அமைத்தும் முகாம் நடத்தியும் தனது இயக்கத்திற்காகக் கொடி ஒன்றையும் அமைத்தார். அரசியல் கட்சி என்றால் என்னவென்றே தெரியாத அந்தக் காலக்கட்டத்தில் அதன் கூறுகளையெல்லாம் கொண்டிருந்தது அய்யா வைகுண்டரின் இயக்கம் என்றால் மிகையாகாயது. காவி நிறத்தில் வெள்ளைத் தீபச் சுடரைத் தாங்கிய அந்தக் கொடியை அன்புக்கொடி என்றும் தன்னைப் பின்பற்றுவோரை அன்புக்கொடி மக்கள் என்றும் குறிப்பிட்டார். இன்றும் அய்யா வைகுண்டரைப் பின்பற்றுவோர் நிழல்தாங்கல்களில் இக்கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தி வருகின்றனர். இவரின் பிறந்த தினத்தன்று நடக்கும் ஊர்வலத்தின் போது இக்கொடியை ஏந்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமூக சீர்திருத்தவாதியான அய்யா வைகுண்டர், ஒரே நேரத்தில் மன்னர், பார்ப்பனியம் மற்றும் அந்நிய ஆட்சியாளர்கள், மதபோதகர்களின் எதிர்ப்பையும் சந்தித்தார். இதனால் சற்றும் தலைத்துப் போகாமல் சமூகத்தில் ஆதிக்க சக்தியாக இருந்த பார்ப்பனிய மன்னரையும் வெளிப்படையாகவே எதிர்க்கத் துணிந்தார். பிராமணர்களை முற்றிலுமாக எதிர்த்து நின்றார். பிராமணியம் எனும் ஏகபோகத் தன்மையைக் கருவறுக்க வேண்டும் என மக்களிடையே எடுத்துக்கூறினார். இப்படித் திருவிதாங்கூர் ராஜாவையும், பார்ப்பனியத்தையும் எதிர்த்து நின்றவர் தனது செயல்பாட்டின் காரணமாக ஒரு தனி சமயப் பிரிவினை உருவாக்கி அதன்

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

மூலம் உயர்சாதிய அவமரியாதைகளிலிருந்து மக்கள் விடுதலைப் பெற முடியும் என்று உணர்த்தியதின் விளைவாக குமரிப் பகுதியில் நாடார் சமூகத்தவரிடையே விரைந்து பரவி வந்த கிறிஸ்தவ மதம் தடைப்பட்டு நின்றது. இதனால் கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் பிரிட்டிஸாரின் எதிர்ப்புக்கும் காரணமானார். அய்யா வைகுண்டர் உயிரோடு இருந்த காலத்தில் மட்டுமல்ல அதற்குப் பிறகும்கூட அவரால் உருவாக்கப்பெற்ற இயக்கம் தங்களது மதமாற்றத்திற்கு இடையூறாக இருந்ததாகவும் பிரிட்டிஸார் கருதியுள்ளனர்.

**பெண்களின் உரிமை**

தமிழ் மதத்தின் அறிவுசார்ந்த எண்ணங்கள் இந்து மதத்தின் உயர்சாதி வெறியை எதிர்த்துப் போராடிய போது அதன் உபவிளைவாக சமயப் பூசல்களை அடியோடு வெறுத்தார். அடித்தட்டு பெண்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த அய்யா வைகுண்டர் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்களைத் தைரியமாக தோள்சேலை அணியுமாறு அவர் கேட்டுக் கொண்டார். அய்யா வைகுண்டரின் காலத்தில் கிறிஸ்தவ போதகர்களின் வழிகாட்டுதலில் கிறிஸ்தவ நாடார்களினால் துவங்கப்பட்ட இந்தத் தோள்சேலை அணியும் போராட்டம் சுவாமிகளின் மறைவுக்குப் பிறகு, கிறிஸ்தவ நாடார்கள் இந்து நாடார்கள் இருவரும் இணைந்து நின்று போராடினர். இதன் விளைவாக 1859 இல் நாடார் பெண்களுக்கு தோள் சேலை அணிகிற உரிமையை திருவிதாங்கூர் அரசு வழங்கியது. தொடர்ந்து போராட்டங்கள் நடந்த காரணத்தால் 1865 இல் இதர அடித்தட்டு சாதிப் பெண்களுக்கும் அந்த உரிமை தரப்பட்டது.

**மதிப்பீடு**

அய்யா வைகுண்டர் ஒரு சமூகச் சீர்திருத்தவாதியாக வாழ்ந்து வந்துள்ளார். மக்களை தீண்டாமை என்னும் இனப்பாகுபாடுகளிலிருந்து மீட்டெடுத்துள்ளார். மக்களிட்ம ஒற்றுமையை நிலைநிறுத்த உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வுகளை நிராகரிக்க சமத்துவசங்கம் நிழல், தாங்கல், தலைப்பாகை, சமதர்மக் காலனி, முத்திரிக்கிணறு, துவையல் பந்தி, அன்புக்கொடி மக்கள், பெண்களின் உரிமை என ஒவ்வொருவிதமான சீர்திருத்தங்களை மேம்படுத்தி தீண்டாமை என்னும் இருளிலிருந்து மக்களை மீட்டெடுத்துள்ளார். இவ்வாறு ஒருதனி மனிதனாகப் போராடிய அய்யா வைகுண்ட சுவாமிகளை நோக்கி பல சீடர்கள் தோற்றம் பெற்றனர். இச்சீடர்கள் இவரது போதனைகளை ஒவ்வொரு ஊராகச் சென்று மக்களிடம் போதித்து அறியாமையைப் போக்கச் செய்தனர். இவ்வாறு மக்களுக்காகப் போராடிய அய்யா வைகுண்டர் போதனைகளைப் பின்பற்றி இன்றும் சாமித்தோப்பில் வழிபாடுகளும் திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

**நூற்பட்டியல்**

[1] அகிலத்திரட்டு அம்மானை அறப்பாடநூல் (முதல் வகுப்பு), வைகுண்டர் சேவா சங்கம் (அமைப்பு), ஆத்தூர்.

[2] அகிலத்திரட்டு அம்மானை (1989), (தி. பலராமச்சந்திரன் நாடார் பதிப்பகம்), 9வது பதிவு.

[3] அமலன், என் (2000), அய்யா வைகுண்டர் புனித வரலாறு, அகிலம் பப்ளிகேஷன்ஸ், சுவாமிதோப்பு.

[4] அரிசுந்தர மணி, ஏ (2002), அகிலத்திரட்டு அம்மானை பாராயண உரை, அய்யா வைகுண்டர் திருக்குடும்பம் பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில்.

[5] செல்லம் வேதி; (2002), தமிழர் வரலாறு பண்பாடு (தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரம்), மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

[6] தர்மராசன்,டி (1996), அகிலத்திரட்டு, பொன் பதிப்பகம், சென்னை.

[7] இளங்கோ, என் மற்றும் விஜய சாந்தி இளங்கோ (1997), அய்யா வைகுண்டர் – தி லைட் ஆஃப் தி வேர்ல்ட், (ஆசிரியர்களால் வெளியிடப்பட்டது).

[8] இளஞ்செழியன், எம் (1999), பாண்டியர்குல நாடார்கள் குளமுறை கிளத்தல், செழியர் பதிப்பகம், விருதுநகர்.

[9] இம்மானுவேல், எம் (2007), கன்னியாகுமரி: அம்சங்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள், வரலாற்று ஆராய்ச்சி & வெளியீடுகள் அறக்கட்டளை, நாகர்கோயில்,
ISBN 978-81- 901506-2-0

[10] கிருஷ்ணநாதன், டி (2000), அய்யா வைகுண்டரின் வாழ்வும் சிந்தனையும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், திணை வெளியீடுகள், நாகர்கோவில்.

[11] பாண்டியன், எம்எஸ்எஸ் (1992) 'காலனித்துவம்' மற்றும் 'தேசியம்' என்பதன் அர்த்தங்கள்: வைகுண்ட சுவாமி வழிபாட்டு முறை, முனிவர் பதிப்பகம் பற்றிய கட்டுரை

[12] பேட்ரிக், ஜி (2003), மதம் மற்றும் சபால்டர்ன் ஏஜென்சி, கிறிஸ்தவ ஆய்வுகள் துறை, மெட்ராஸ் பல்கலைக்கழகம், சென்னை.

[13] பொன்னு, ஆர் (2000), ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் மற்றும் தென்னிந்தியாவில் சமூக சமத்துவத்திற்கான போராட்டம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், ராம் பதிப்பகம், மதுரை.

[14] பொன்னு, ஆர் (2002), வைகுண்ட சுவாமிகள் ஒரே அவதாரம், ராம் பதிப்பகம்0, மதுரை.

[15] மணிபாரதி, ஏ (2003), அகிலத்திரட்டு விளக்க உரை, திருநாமப்புகழ் பதிப்பகம், சென்னை.

[16] மதன்ஜீத் சிங் (2005), தி சாசியா ஸ்டோரி, பிரான்ஸ், ISBN 92-3-103992-X.

[17] நாகம் ஐயா,வி (1989), தி திருவாங்கூர் ஸ்டேட் மேனுவல், வால்யூம்-2, ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், ISBN 81-85499-33-0.

[18] ராமசுப்பிரமணியம், வி.டி (2001), திருமகள் தமிழகரதி, திருமகள் நிலையம், சென்னை.

[19] ராமசாமி, எஸ்எம் (2006), ஜியோமேடிக்ஸ் இன் சுனாமி, ரிமோட் சென்சிங் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், இந்தியா - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நியூ இந்தியா பப்ளிஷிங், ISBN 81-89422-31-6

[20] சாமுவேல் மேட்டர் (1871), தி லேண்ட் ஆஃப் தொண்டு: திருவிதாங்கூர் மற்றும் அதன் மக்கள் பற்றிய விளக்கக் கணக்கு, ஏசியன் எஜுகேஷனல் சர்வீசஸ், ISBN 81-206-0319-2

[21] சர்வேஸ்வரன், பி, ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் - ஒரு மறக்கப்பட்ட சமூக சீர்திருத்தவாதி.

[22] சாமுவேல் செக்காரியா (1897), தெற்கு திருவாங்கூரில் லண்டன் மிஷனரி சொசைட்டி 1805-1855, எல்எம்எஸ் பிரஸ், நாகர்கோவில்.

[23] சாந்தி, எஸ். "கல்வி குறித்த சுவாமி விவேகானந்தரின் பார்வை." JETIR 6, எண். 5 (2019): 598-602.

[24] சண்முகம்,ஆர் (2001), நாடார் குலத்தில் நாராயணர் அவதாரம், நாடார் குலதீபம் பப்ளிகேஷன்ஸ், காரங்காடு.

[25] ஸ்ரீதர மேனன்.ஏ (1967), எ சர்வே ஆஃப் கேரளா ஹிஸ்டரி, டி.சி. புக்ஸ், கோட்டயம், ஐஎஸ்பிஎன் 81-264-1578-9

[26] சுந்தரம் சுவாமிகள், பி மற்றும் பொன்னுமணி, கே (2000), உச்சிப்படிப்பு, அய்யாவைகுண்ட நாதர் சித்தாஸ்ரமம், பொத்தையடி.

[27] சுந்தரம் சுவாமிகள்.பி மற்றும் பொன்னுமணி.கே (2001), அய்யாவைகுண்டநாதர் ஜீவசரித்திரம் (அய்யா வைகுண்ட நாதர் வாழ்க்கை வரலாறு), அய்யாவைகுண்டநாதர் சித்தாஸ்ரமம் பப்ளிகேஷன்ஸ், பொத்தையாடி.

[28] தேச்சனத்து துவரக பதி, அகிலத்திரட்டு அகக்கோர்வை, தெச்சனத்து துவரக பதி பதிப்பகம்.

[29] விவேகானந்தன்,என் (2003), அகிலத்திரட்டு அம்மானை மூலமும் உரையும் (பகுதி 1&2), விவேகானந்தா பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில்.

[30] விவேகானந்தன்.என் (2001), அருள் நூல் மூலமும் உரையும், விவேகானந்தா பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில்.

[31] வைகுண்டர் சேவா சங்கம் (2002), (ஒரு அமைப்பு) அய்யா வைகுண்டர் 170வது அவதாரம்-சிறப்பு பதிப்பு, ஆத்தூர்.

[32] விவேகானந்தன்.என் (1988), அகிலத்திரட்டு அம்மானையில் வைகுண்ட சுவாமி சம்பூரணதேவனா, விவேகானந்தர் பதிப்பாக்கம், நாகர்கோவில்.

Volume 2, Issue 1, November 2021 E-ISSN: 2583-0880

[33] வார்டு, சிஎஃப் மற்றும் கோனர் (1860), திருவிதாங்கூர் மற்றும் கொச்சி மாநிலங்களின் சர்வேயின் புவியியல் மற்றும் புள்ளியியல் நினைவுக் குறிப்பு, திருவாங்கூர் சிர்கார் அச்சகம், திருவனந்தபுரம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.